06
1726
OFFICE ... 20 MAR 1934 ... MADRAS

பிரசுரம் ✝ நிர். 2

எ. எம். டி. ஜீ.

# நவகீதா மஞ்சரி

என்னும்

சேசுநாத சுவாமி
ரக்ஷண்ய வருட ஜூபிலி ஞாபகார்த்தமாக
அகிலதியானி என்னும் நூல் எழுதியவரும்
மதுரை பாகவதர்

அ. சீ. யா.
**மரிய சிரோன்மணி பாவலரால்**
இயற்றப்பெற்றதை

மகா-ள-ள-ஸ்ரீ
**மு. வி. அடைக்கலம் பிள்ளை**
அவர்கள் உதவியால்

அச்சிட்டு புளியம்பட்டி அர்ச். அந்தோனியார் கோவில்
திருநாளில் பாடி அறங்கேற்றப்பெற்றது.

தூத்துக்குடி
வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில் அச்சிடப்பெற்றது.
1934. [அணா 2.
புத்தகங்கள் 1000.

Q6:417
N34
172088.

OFFICE OF THE R...
20 MAR 193
MADRA...

✠

# நவகீதா மஞ்சரி.

## சாற்றுக் கவிகள்.

செங்கல்பட்டு ஜில்லா சங்கைக்குறிய பங்குக்
குருசுவாமியவர்கள் தந்தையரும் தஞ்சாவூர் ஜில்லா
மாரநெறி கிராமம் ஸ்ரீமான்,

**பிரபலசாமி உடையார் கவிராயர்**

பெருமானவர்களாற் பாடிக்கொடுக்கப் பெற்றது.

விருத்தம்.

அரியதிரு பரமசருவேசன் மீதும்
அன்னைமரி முதலாம் அச்சீஸ்ட்டர் மீதும்
பிரியமுடன் தோத்திரப்பாக் கீர்த்தனங்கள்
பிரமிக்க புலவர் பிரபலமாய்ச் செய்தான்
உரியதமிழ் செழித்தோங்கும் மதுரை தன்னில்
ஓங்குபுகள் யாகப்பன் தவத்துதித்த
மரியசிரோன் மணிபுலவன் மகிமை ஓங்கும்
வாடாத மாலைஎன வயங்க மாதோ.

இஃது

யாழ்ப்பாணம் மகா-ா-ா-ஸ்ரீ

**வேதநாயகம் சேகரம் பிள்ளை பாவலர்**

அவர்களால் இயற்றித் தரப்பெற்றது.

விருத்தம்.

அரியகலை பல உலகில் அறிந்ததீரன்
ஆரியர்கள் புகழ் மதுரை நாட்டிற் செல்வ
உரிமை எனத் தானோங்கும் கொசபாளையம்
உற்ற சந்தந் தோனியார் ஆலயத்து

திருநிறைந்த யாகப்பன் தந்த சூரன்
செல்வனும் வித்யா சிங்கமென்னும்
மரிய சிரோன்மணி புலவன் சொல்ய பாடல்
வையகத்தில் தேனமிர்த வாக்குத் தானே.

172088



இதுவுமது

வாக்கென்ற வாக்கினிலே வல்ல வாக்கு
வல்லபரன் சொல்லருள் வழுத்தும் வாக்கு
தேக்கமழும் சோலைசெறி மதுரை நாட்டில்
செந்தமிழோன் மரிய சிரோன் மணியின் வாக்கு
பூக்களிலே வண்டுநுகர் தேனின் வாக்கு
பூதலத்தில் என்றென்றும் புகழும் வாக்கு
பாக்கியமாய் இவர் பாடல் கேட்போருக்கு
பரலோக செல்வம் பரிமளிக்குந் தானே.

✠

## ஆக்கியோன் முகஉரை.

ஐயா,

சத்தியவேத கத்தோலிக்கு பெரியோர்கள் பிரபுக்கள் சகோதர சகோதரிகள் இஷ்டர் மித்திரர்கள் மற்றும் நற்றமிழ் வித்துவ நாவலர் பாவலர் உற்றும் அரசர் குருக்களுக்கும் வந்தனம் அளிக்கின்றேன். நமது உலக ரக்ஷகராகிய யேசுநாத சுவாமி மனுஷவதாரமான 1933ம் வருட திருஜுபிலிஞாபகார்த்தமாக **நவகீதா மஞ்சரி** என்னும் சங்கீத நூல் எழுதி பிரசுரம் செய்யலானேன். இஃதில் யாதேனும் செய்வினை தவறி இருக்குமாகில் பெரியோர்கள் மட்கலத்தை இகழாது அமுதை அருந்துவது போல் பரிசுத்தர்கள் பேரில் என் புன்சொல்லால் செப்பி எழுதியதை ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன். இதற்குமுன் 1929-ல் பரிசுத்த பிதாவாம் பதினோராம் பத்திநாதபாப்புவின் தங்க ஜுபிலியைப்பற்றி எழுதி அதற்கு **அகிலதியானி** என்று நாமகரணமிட்டு பிரஸ்தாபிக்கப் பெற்றது. இவ்வாறாக 4, 5 வருட அளவாக திருச்சினாப்பள்ளி மெற்றிராசனத்திலும் தூத்துக்குடி மெற்றிராசனத்திலும் நமது குருசுவாமியவர்கள் பக்கமாக இருந்து தேவஊழியம் சங்கீதரூப கதா காலக்ஷேபங்களால் மாந்தர்கள் மனதைப் புனிதப்படுத்தி வந்திருக்கின்றேன். சிற்சில நாடகங்களும் நடத்தி இருக்கின்றேன். நமது சரித்திரங்கள் தந்தால் நாடகமாக எழுதித் தருகிறேன்.

பெரியவர்களே! தங்களிடம் தற்போது இரண்டு காரியங்களைக் கோரி வந்திருக்கின்றேன். அவை யாவன, ஒன்றில் நமது சத்திய சரித்திரங்களில் சிலது நாடகங்களாக எழுதி இருக்கின்றேன். அதனை அச்சிடவும் கிராமபோன் பிளேட்டில் நமது பாட்டுகள் பாடித் தரப்போகிறபடியால் அதற்காகவும் தங்களுடையவும் கிராமத்தார்களுடையவும் அருளாசியும் பொருளாசியும் தந்து காப்பாற்ற வேணுமாயும் ஒரு வருடத்தில் ஒரு முறையாவது தங்களை வந்துபார்க்கும் பாக்கியம் கிடைக்கும்படி சுவாமி கிருபை பாலிப்பாராக, எனது கதாகாலச்சேபங்களைக் கேட்டு ஆனந்திக்கும்படியும் மிகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இங்ஙனம் தங்களன்புள்ள நண்பன்,

அ. சீ. யா. மதுரை பாகவதன் மரிய சிரோன்மணி பாவலன்,
அர்ச். அந்தோனியார் கோவில்தெரு,
பழையகுயவர் பாளையம்
மதுரை.

## ஆக்கியோன் வந்தனப்பா.

இந்தியாவுக்கே சுதந்திரம் (என்ற வர்ண மெட்டு.)
என்று சொன்னேன் வந்தே மாதரம். (தாளம் ஆதி.)

பல்லவி.

வந்தனந் தந்தேனிந்த மங்கள மாசபை யோருக்கே.

அனு பல்லவி.

சிந்தை மகிழுடனே சிரம் குனிந்தும் காம் கூப்பியும். (வந்)

சரணம்.

எந்தையாம் பாப்பரசர் இருதாள் சரணம் போற்றி
சந்தப் பதமலர் சாற்றி. (வந்)

தொகையறு.

இத்தலத்தில் சத்தியவேத உத்தமராம் ரோஜாண்டவர்க்கும்
சித்தம்நல்கும் குருக்களுக்கும் ஐந்தாம் ஜியார்சரசர் மேரி ராணியார்க்கும்.

சரணத் தொடர்வு.

முத்தமிழ் திருமந்திர பூமி முழங்கும் பாமரிய சிரோன்மணி
சித்தம் நல்குமே சாமி (வந்தனம்)

## யேசுநாத சுவாமி திரு ஜூபிலியைப்பற்றி பாடியது.

நம்பிக்கை கோண்டேல்லோரும் கைராட்டை சுற்றுவோம்.

என்ற வர்ண மெட்டு.

தாளம். பல்லவி. ஆதி.

மங்கள ஜூபிலி வருட மகிமை நாடுவேன்.

அனுபல்லவி.

மகிமை நாடுவேன், மனம், சுகிக்கப் பாடுவேன்—மகா மங்கள

சரணம்.

சங்கிதம் பருகும் சக்ஷனரே
சன்மார்க்கம் ஒழுகும் விற்பனரே
சந்ததம் யேசுவின் விந்தையாம் பதமதை
சார்ந்திலங்குபரே (மகா மங்கள)

தோகையரு.

ஆயிரத்தொள்ளாயிரத் முப்பத்தி னுலாண்டாம்
ஜெனவரி ஒன்றாந் தெய்தி
தூயபிதாவின் சுதனும் யேசு நாம
திருஜூபிலி துதிக்க நீதி

சரண எடுப்பு.

ஞாயமாம் உலகுக்கு நீதி,—இதை
நவிலுவதால் பிரக்கியாதி
ஞானமே பானமும் கியானமே தியானமாய்
சங்கீதம் சுவாதி (மகா மங்கள)

தோகயரு.

நிலவுதவழ் சிகர கோபுர மாடமாளிகை
நிமிர்ந்தடர் தொளிறும் மதுரைமா னகராம்
விழைவுசூழ் தேன்மலிகாவும் கழனியும் நதியும்
வியப்புறும் தடாகமுஞ் சீராம்.

சரண எடுப்பு.

பலகலை நுதலும் சீலன், சுய பண்புறு யேசுநன் மேலன்
பதமதை மரியசிரோன்மணி சதமென பணிந்தேனுன் பாலன்(ம)

மிகவும் சங்கை தங்கிய
## திபிரியூஸ் ரோச் மேற்றிராணி ஆண்டவர்
அவர்கள் பேரில் வந்தன வாழ்த்துப்பா.

இராகம் பிலகரி ரேங்கநாயகமே என்ற மெட்டு தாளம் ரூபகம்.

172088

பல்லவி.

மங்களா கரனே வாழ்க வாழ்க
ரோச் ஆண்டவரெனு மாதவ. (மங்களாகரனே.)

அனு பல்லவி.

எங்கும் நற்புகழ் தங்கும் சற்குண
சிங்கார ஜெய. (மங்களாகரனே.)

சரணம்.

1. பொங்கும் அருள்கோனே, தங்கமெய்யாரனே
எங்களை ஆண்டிடும் செங்கோல் ஜெய சீலனே
கங்கணங்கள் கட்டி சங்கீதங்கள் சூட்டி
இங்ஙனம் வாழ்த்தினேன். (மங்களா)

2. திருமந்திரககரமர் நறுமண பிரவுவே
பொருமைநிறை மெய்மறையின் குருவதாமெங்கோவே
அருமையாய் என திருகரம் குவித்தே வணங்கி
சிறியேன் யான் போற்றினேன். (மங்கள)

3. மாக்ஷிமை தங்கிய மத்தேயு நாதராம்
ஆக்ஷிசெய்யும் பங்குஅதி சிரேட்டர் குருவாம்
தாட்க்ஷண்யமிகும் சக்ஷணர் குபேரராம்
சந்தப்பா சரணம் நேராம். (மங்களா)

4. மரிய சிரோன்மணி மகிபனே நீ யணி
மாமணி தூய்மை நீ மனங்கனி நவமே நீ
அரியதவப்பா நீ ஆனந்தந் தேம்பா நீ
ஆசீரளி சோமா நீ. (மங்களா)

## சுவாமியைத் தோத்தரித்தல்.

மாமணி மரகதசுக சாசரூப ஞான வரமருள் மீனு
என்ற வர்ண மெட்டு தாளம் ஆதி.

பல்லவி.

சாமியின் சனுவெனும் வரம் சர்வ நன்மை ஞானம்
தரும் அருட்கியானம். (சாமிபா)

அனுபல்லவி கண்ணிகள்.

1. நேமியமாக நாமும் நிதமொழுகினாலே
பூமியின் பலாபலன்கள் பொங்குமே தன்னாலே. (சா)

2. சுத்த கருத்தோடு நிதம் தொல்லுல கில் நாள் விடுத்தால்
அத்தன் பரலோகமென்னும் ஆனந்தப்முகியாதப்பால்

3. சத்திய வேதமதனை சார்ந்திலங்கும்மாண்மியோர்க்கும்
புத்தியுத்தி சித்தமென்னும் தத்துவங்களாற்கும். (சா)

4. உரியதமிழ் சிறியவர்க்கும்உடன்கொடுக்கும்வல்லோன்
மரியசிரோன்மணி தமிட்கும்மன மகிழும் நல்லோன்.

## பிதாவாகிய சர்வேஸ்பரன் பேரில் பதம்.

உள்ளதை தெரியச் சோல்லுவாம்
ஏன்ற வர்ணமெட்டு. தாளம் ஆதி.

பல்லவி.

அண்டம் அகண்டம் யாவையும் உண்டு பண்ணின
ஆண்டவனே காண்டல்செய் என்னை, அருமறை குருபர (அண்)

அனுபல்வவி.

1. மண்டலத்தில் உன்னைத் தானே மாக்ஷிமை யுடனேனுனே
கொண்டுமே தொழுதேன் தேனே கோமானே தயாபஞான

சரணம்.

2. வண்டனும் பார்போ னரசனும்—எசராயரை
வதைசெய்யா விடப்பயனும்—புரையதில் மீண்டும்
பூண்டாம் முட்செடி இனில் புனிதமோ யீசமுனி
காண்டல் கொடுத்த திவ்யகர்த்தாவே சரணுமணி.

கொண்டல்பொலி நன்நகரதாம் மதுரை பேராம்
நொசப பாளையம் சீராம—மரியசிரோன் மணி
தென்றல் பரவும் நலதேம் பாப்பாவணி மாலை
வேண்டல் செய்துமே நலவேதா தொழுதேன் காலை.
(அண்டம்.)

## சுதனுன சர்வேசுரன் பேரில்

மயில்வாகனம் ஏரிவா முருகா என்ற வர்ணமெட்டு.

தாளம் பல்லவி. ஆதி.

முகில் வாகனம் ஏரி மின்னுலத் தேரி—முகில்

அனுபல்லவி மகுடம்.

1. மூதறிஞர் ஓதிவாழ்த்தும் (முகில்)
2. முகத்தி னெளிவிடும் ஜெகத்தில் வழிகோடும் (முகில்)
3. மஞ்சுக விசினத்தில் அஞ்சு காயமுடன் (முகில்)
4. மாதுமீது காதல்கொண்ட தீதுவாது பேதமகற்ற (முகில்)

அனுபல்லவி.

அகிலகவலை நீக்கி உன் துதிமேலாக்கி
உருதி வரப்பிரசாத தருவீர் தருவீர்போதமுத (முகில்)

சரணம்.

தருணமரவா தாழும் தற்பர யேசுநாதா
தமியேன் மரியசிரோன்மணி தயாபர கிதநீதா
வரிநிறை கிருபா நீதி எனும் போதா
வந்தனந்தந்தேன் நீதி சந்ததம் சந்ததம் ஆள்பொற்சோதி
(முகில்)

## திவ்ய இஸ்ப்பிரீத்து சாந்து சர்வேசுரன் பேரில் பதம்

ஸ்ரீராமச் சந்திரனே என்ற வர்ணமெட்டு.

தாளம். பல்லவி, கண்ணிகள். ஆதி.

இஸ்ப்பிரித்து சாந்துவே உன்
இருதாள் மலர்ப் பணிந்தேன் என் சிரசில் நின்னருள

ஈ ஈ ஈ

ஏகனே கன யோகனே. (இஸ்பிரித்து.)

மோக்ஷ சிங்காசனனே
காக்ஷி கொடுப்பவனே
ஆக்ஷர்யமே உனை ஆராதித்தேனே
அல்லே லூயா ஆமனு • (இஸ்பிரித்து.)

அரியதயை சிங்காரா உரியவரந்தா சீரா
மரிய சிரோனமணியின் மனதீரா
மாக்ஷிபா மறையின் காக்ஷிபா (இஸ்ப்பிரித்து)

## பரிசுத்த அடைக்கலமாதா என்ற தேவமாதா பேரில் பதம்.

நீயுரைப்பாயே அனுமான் நான் வந்ததாகப்போய் என்ற வர்ணமெட்டு.

தாளம் பல்லவி ஆதி.

பாதுகாரும் மாமரியாயே பரிபூரணப் பிரியே, பாதுகா

அனுபல்லவி.

ஆதரை மீதுனை அனுதினம் போற்றி
அனுக்கிரகம்பெற்றுமே அதிபுகளேற்றி
கீதசங்கீதத் துந்தனு மீட்டி
கின்னரத் தொனியுடன் ராகமுஞ் சாற்றி. பாதுகா

சரணம்.

மாமறைக் கரசியே ஈயும்நின் ஞசியே
மரியசிரோன்மணி வணங்கும் பிரகாசியே
க்ஷேமமே யருளும் திவ்ய சஞ்சீவியே
தித்திக்கும் முத்திக்கும் கீர்த்திப் பிரதானியே
தேடியே நாடியே ஓடியே கூடியே
பாடிடும் பாவிற்கு விஷேடியே கோடியே
பாதுகாரும்.

## அர்ச். சூசையப்ப முனிந்திரர் பேரில் பதம்.

சமான ரகித குணபதியுவதி என்ற வர்ணமெட்டு.

தாளம். பல்லவி. ஆதி.

அருமாமறை குருதிரு முனியே சூசைமா மணியே (அரு)

அனுபல்லவி.

நறுமா விரை கற்பின் பொற் கொடியே
செறிமாபுரை விற்பனர் முடியே. (அரு)

சரணம்.

1. மாசில்லாதஞானப்பிரசாதா மங்காகலம்பொங்கும்நற்கியாதா
பேசரும் மாசறும் விநோதா
போற்றினேன் பொற்பதம் நிதம் நீதா. (அரு)

2. தியாகம் அருள் சந்தசெந்தேனே
சரணம் செய்தேன் சிறியேநானே
பியாகாம் ராகம் பாடினேன் கோனே
பிரியமரிய சிரோன்மணி வரனே. (அரு)

## யேசுசபைத் தலைவர் அர்ச். இஞ்ஞாசியார்பேரில் பதம்

காக்ஷி கண் காக்ஷியே என்ற வர்ண்மெட்டு.

தாளம் பல்லவி. ஆதி.

ஆதியின் நீதிபன் அன்பன் இஞ்ஞாசி போதன்

அனுபல்லவி மகுடம்.

1. அத்தன் யேசுநாதனின் உத்தம சபை ஸ்தாபகன்
2. ஆக்ஷிமாக்ஷி, கருணை, காக்ஷி தாட்க்ஷி, வரனே. (ஆதி)
3. அம்பர இம்பர மும்புகழுந்திரு
4. தம்பிரான் யேசுவின் கெம்பீர நேகுரு.

சரணம்.

ஜோதிமயமாய் விளங்கும் சொர்ண நய கிரீடனே
சொல்லரும் படைக்களத்தில் வல்லமைமுன் நாடனே
நீதியாய் உலகிலும்மை நித்தந்தொழுதேன் ஞனே
நேசித்தே ஆண்டருள் வாயே சீமா, தயை

வாசிமிகுத்த மகத்துவகோமா – பேயை
விசித்துரத்திய தத்துவ பூமா – பய
மாசணுகா வாசன் மரியசிரோன்மணி நேசன்
பூஜிக்கும்பிரகாசபோஜன் பொன்னுலகிலும் ராஜன் (ஆதி)

## அர்ச். அந்தோனியார் பேரில் பதம்.

வா வா இதுசமயம் வள்ளிமணுளா மயிலேரி என்ற வர்ணமெட்டு.

தாளம். பல்லவி. ஆதி.

காவா தவமுனியே காசினி தனிலெனயே (காவா)

அனுபல்லவி கண்ணிகள்.

1. தேவாதி தேவனே திருக்கரம் ஏந்தினே
ஆவலாய் உந்தனே அண்டிவந்தேன் ஆட்கொளமை (கா)

2. பாவாலே பாலர்களும் பாடித் துதிக்கருளும்
காவலாய் கார்த்தருளும் கருணே வாரி தருணமருளும் (கா)

3. திரைநிறை மட்கூஷங்களும் அருள்தரு பிரசங்கத்தை
தரைநிறை மானிடர்முன் திருமறையைத் தந்தவா. (கா)

4. அரியதவ முனியே மரியசிரோன் மணியே
பிரியமுட னணியே திருபுரி தரிகிருபா சரணம். (காவா)

## அர்ச். அந்தோனியார் பேரில் பதம்.

செந்தூர் வேலாண்டி என்ற வர்ண மெட்டு.

தாளம். பல்லவி. ஆதி.

அந்தோனி கனியே–ஆள் இனிய (அந்தோனி)

அனுபல்லவி.

ஆதி அத்தநணியே மணியே–சந்தந்தோனி.

சரணம்.

1. கந்தம் நிறைந்த போதா கருணேசற் பிரசாதா
கழல்பணி மழலேகள் பழனனத் துகழுகள்
விலகியு முனதருள் கலனெனப் பாவருள். (அந்தோனி)

மகுடம்.

கத்தனேக் காம் வைத்தும் இன்நேரம்
சித்தம் மகிழ்வாம் உத்தமாதா உறம். (அந்தோனி)

2. தந்தையாம் காவலன் தயங்கிடாதே நலன்
தாணியில் வேந்தனிடம் விரைவினிற் சென்றவ்விடம்
சிறுமிஉயிர்த்துத்திடம் குறவன் மகிழ் மகுடம். (அந்)

மகுடம்.

செறிதிறை மட்சம் நிறைய மாந்தர் லக்ஷம்
வெறிஎனும் அச்சம் நெறி பரைய மிச்சம். (அந்)

3. மரியசிரோன்மணி மணமகிழ்தேம்பாவேநீ
மங்கள மெங்கணும் தங்கவே இங்கிர்த
மிங்கணும் பொங்கவே கங்கண சங்கிர்த (அந்)

## அர்ச். அந்தோனியார் பேரில் பதம்.

தசரத ராஜ குமாரா என்ற வர்ண மெட்டு.

தாளம். பல்லவி. ஆதி.

மாக்ஷிமை நிறைந்தமுனி நாதா மகிமை நீதா
மாசற்கியாதா மறைப்போதா. (மாக்ஷி)

அனுபல்லவி.

1. ஆக்ஷர்ய பரனை அருங்கரத் தேந்தி
அடியேனை ஆண்டருள் அருந்தவத் தோங்கி
தாட்க்ஷியுடனே தருவாய் சித்தாந்தி
தஞ்சமென சரண்புகுந்தேன் மருண் நிகழ்ந்தேன்
சிரங்குவிந்தேன் புரிந்தேனே. (மாக்ஷி)

2. ஆசைமிகுந்த ஸீசுநகரம் ஜெனனவதாரம்
செய்தீர் நீரும் பெறிய வரும்,
நேசமில்லா எமை நித்தமே காரும்
நெஞ்சகச்சஞ்சலம் நீங்கிடக்கோரும்
வாசமலர்ப் பாதத்தை வந்தனம் பாரும்
வரம்நிறை தரும சொருபா மறைய ரூபா
உரைகிருபா அருள் பாவா. (மாக்ஷி)

3. அந்தம் நிறைபரனின்தொனியே அருட் கனியே
அந்தோனியே அடியேனயே

தொந்தரை செய்புலகம் தந்திரம் நீக்கி
மைந்தனும் எந்தனை உந்தனுளாக்கி
கந்தம் பெருகும் உந்தன் விந்தை தியாகி
கடைபிடித் தொழுகும் படியே விடையளியே
உடன்படியே உன்னடியே. (மாக்ஷி)

4. பழய குயவர் பூமியம் பேராம் மதுரையூராம்
கோவில் சீராம் சிறப்புற்றீராம்
மழலையாம் பாலன் மரிய சிரோன்மணி
மயங்கிடாதாழும் மாசில்லானே நீ
வளமிகும்நலங்கள் நிறைபாக்களாற் றொனி
வழுத்திட வரமருள் சீமா தரும பூமா
பரம நாமா சரண மா. (மாக்ஷி)

## அர்ச். செபஸ்தியார் பேரில் பதம்.

கேரலாயுரே என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

தாளம் பல்லவி ஆதி.

படைத் தலைவரே, எனை, பாதுகாரும் நேரே. (படை)

அனுபல்லவி.

பாதுகாரும் நேரே, போதமீய்ந்தருள் சீரே. (படை)

சரணம்.

1. கொடைக்கலசெபஸ்தியாரே கோத்திரத்தில்சிறந்தோரே
அடைக்கலம் வந்தோரே ஆதரிக்கும் தீரரே. (படை)

2. கொடுந்தியோக்கிலேசியன் கோரியதில் நீ சிலாக்கியன்
படுந்துரோகி சுடத்தாக்கின் பாடடைந்தீர் பாக்கியன்.

3. வேதசாக்ஷி முடிபுனைந்தாய் விண்ணிலும் மண்ணிலும் சிறந்தாய்
சீதமாக்ஷியுகந்தாய் கும்பிட்டே நம்பிட்டேன் தந்தாய் (படை)

4. மரியசிரோன்மணி மகிமையைத் தற்காத்து நீ
பிரியயேசுமுன்னணி போற்றினேன் கீதப் பாவணி (படை)

## அர்ச். சவேரியார் பேரில் பதம்.

சந்தனந் திமிர்ந்திலங்கும் குங்குமங் கடம்பிலங்கும் என்றமெட்டு

தாளம் பல்லவி கண்ணிகள். ஆதி.

1. எத்திசை எல்லாம் புகழும் உத்தம சத்தியவேதத்தின்
சித்தராம் சவேரியாரே உமை நானே
நித்தியமும் உத்தமமாய் சித்தம் வைத்து வேண்டிடவே
தத்துவனே இத்தருணம் அருள்தானே. (எத்)

2. சங்கைநிறை பிரான்ஸ் தேசம் எங்கனும் புகழ்மிகுந்
தரங்கமென்னும் கலாசாலைத் தலைவோனே
பொங்கும்நல இஞ்ஞாசியார் தங்கப்பிர சங்கமதால்
எங்களை ரக்ஷித்தும் மங்கா திருப்போனே. (எத்)

3. வண்டுகள் ரீங்காரம் பாடி செண்டுகள் மீதிலே ஆடி
நின்றுபொலி மதுவளியும் மதுரை வாழும்
தென்றல் கொண்டல் விரை கமழும்
நன்றுரை மரியசிரோன்மணி
விண்டிடுந் தமிழை யாழும் தயவோனே. (எத்)

சங்கீத ராணி

## அர்ச். ஜெயசீலி அம்மாள் பேரில் கீத பத...

முருகன் திருமால் மருகன் பெருமை என்ற வர்ணமெட்டு.

தாளம் பல்லவி. ரூபகம்.

சங்கிதம் பொங்குமங்கா செங்கோலி—போற்றும்
சக்ஷணர் மெச்சிடும் அக்ஷய ஜெய சீலி. (சங்)

அனுபல்லவி.

தங்க அங்கம் ...ங்கும் பிரகாசிக்கும்
தாணிற் கனிகனி பாகினும் வரம் நீ ஈ இனிவாகினும்

சரணம்.

ஆகமம் புகழும் அரும்பதக் கியானி ஆதரித்திடு தாய் நீ, பலகலை
ஆய்ந்தருந்திய நயவிற்பனசிரோன்மணி அம்மணிகண்மணி நியாநீ

பாகமதி யாகமபண் புறுராணி பாலன்மரியசிரோன்மணிரஞ்சணி
வேகமதாய்க் காக்கும் கவி வீதாரணி பூஜணி
விஞ்சய ஆஞ்சுகள் அஞ்சுகமே
மஞ்சுகாஞ்சித பஞ்சாமிர்தமே. (சங்கிதம்)

## அர்ச். குழந்தை சேசு திரேசம்மாள் பேரில் கீதபதம்

நாத சங்கீதப் பொன் மணிமண்டபம் என்ற வர்ண மெட்டு.

தாளம். பல்லவி கண்ணிகள். ஆதி.

1. குவலயத்தோர் போற்றும் திரேசம்மாளே
கோடி நமஸ்காரம் நின் பாரிசம் ஆளே
குழந்தை யேசுதிரசே நாமஞ்சாலே
குருகுல தவமணிகுறி நன்னுளே
குமபிட்டேனே, பாலன், நம்பிட்டேனே—மேலன்
கோதகற்றும்படி கும்பிட்டேனே. (குவ)

2. தவபலன் அளித்திடுந் தாயும் நீயே
தாய்மரி அன்னையையும் வேண்டு வாயே
தரணியிற் கேட்கும் வரந்தப்பா வாயே
தவராதளிக்கும் சஞ்சீவி யாவாயே
தத்துவம் நீயே, மோன, சித்துவம் நீயே ஞானம்
தயங்காது ஆதரிக்கும் சத்துவம் நீயே, (குவ)

3. வாலரூப் சொருப பெண்ணரசே
வடிவு சோபனமிகும் விண்பரிசே
வானலோகன் மகிழுந்தவமுறசே
வேண்டினேன் ஆண்டிடு உன்னரசே
வற்று ஊரணி, தவம், பெற்றவழும் நீ நவம
வாஞ்சை பெற்றுய்யும்படி வற்று சீரணி, (குவ)

4. மோக்ஷமதில் வீற்றிருந்து ரோஜாமாரி
பொழிந்தருளுவே னென்று தயாளம் கூறி
மூதறிஞர் ஓதி வாழ்த்தும் ஜெய சிங்காரி
முப்பொழுதும் உத்தமி முழங்கும் பாறி
மங்களம் நீயே, நய, தங்கமும் நீயே, அபயம்
மக்களை காத்திடும் மங்களம் நீயே.

5. மகிழும்நின் திருமுகம் அருளாசி
மருண் மயக்கந் தவிற்றும்பிரகாசி
மரியசிரோன்மணி மனராசி
மாண்புறு பாக்கள் பாடத்துணை வாசி
வச்சிரத் தூணே, மறை, மிச்சமும் நீனே—நிறை
மாந்தர்கள் போற்றும் நல லக்ஷமும் நீனே (குவ)

## அர்ச். சூசையப்பர் பேரில் கீத பதம்.

தேடிவந்தேனே வள்ளிமானே என்ற வர்ண மெட்டு.

தாளம். பல்லவி. ஆதி.

மாக்ஷிநிறைந்த சூசைநாதா. (மாக்ஷி)

அனுபல்லவி.

ஆக்ஷி செய்யாயோ ஆசைபோதா வேதா. (மாக்ஷி)

மகுடம்.

1. மானிலத்தி லுனதிரு புகழ்தனை
நானிதயத்தில் தினம் பெற மகிழ் நினை
2. மன்றல் செய்த மரிமண வாளனே
குன்றுகற்பின் செறிமண சுகந்தோனே (மாக்ஷி)
3. மண்டல மெண்டிசையும் புகழ் கொண்ட வா
தண்டமிழைப் புவில் விண்டிட ஆண்டுவா (மாக்ஷி)

சரணம்.

காக்ஷியருளுங்கோனே கனிமரிய சிரோன்மணி தானே
கங்கண மங்கள பிங்கலமீய் சுகா
இங்கனே சங்கிதமோக்கநின்ஞூசிகா. (மாக்ஷி)

## சுவாமி பேரில் கீத பதம்.

பண்டித மோதிலால் நேரை பரிகொடுத்தோமே என்ற மெட்டு.

தாளம். பல்லவி. ஆதி.

அண்டசராசரமும் போற்றும் ஆதி தெய்வமே

அனுபல்லவி.

ஆதி தெய்வமே, சுகா நீதி வைபவமே—மகா (அண்ட)

172083

சரணம்.

1 தொண்டனு நானுந்தனயே தொழுதேன் பழுதொழியே
வண்டமனப் பேயை வெட்டும் வலுமையும் நீயே
வலுமையும் நீயே மன சலுகை ஈவாயே. (அண்ட)

2. மண்டலமெல்லாம் கொண்டாடும் மாமதுரையாம் எப்பூமி
பண்ணுரை மரிய சிரோன்மணி பதமுயர் நேமி
பதமுயர் நேமி போத இதமருள் சாமி. (அண்ட)

## சுவாமிபேரில் கீத பதம்.

ஞான பண்டித மோதிலால் என்ற வர்ண மெட்டு.

தாளம் பல்லவி. ஆதி.

தீனதயாள தெய்வீகன் திரிலோக நாதன். (தீன)

அனுபல்லவி.

கான சங்கீதத்தேவன் கரைகாணு நீதபோதன்
ஈனமகற்றுஞ் சர்வேசன் ரக்ஷிக்கும் மேலன் (தீன)

தோகயரு.

வானமும் பூமியும் வடிவலங்காரவகையாவும் வகுத்தசீலன்
தானமாய்த் தம்மையே பானமாய்த் தந்த சன்மார்க்க
பேரின்ப நூலன்

அனுபல்லவி.

ஞானநன் மரிய சிரோன்மணி நன்றிவிடும் தேம்பாவே நீ
தேனினுந் தித்திக்கும் பாகணிதேற்றும் மோக்ஷணி.

## வாழி விருத்தம்.

வாழி அறவுரு வாழி மறையுரு, வாழி திருஉரு மானுவீர்
வாழி எமதுயிர் வாழி உலகுயிர், வாழி உயிருயிர் போலுவீர்
வாழி அறநிலை வாழி தவநிலை, வாழி நிலநிலை யாயினீர்
வாழிஎன விவர் வாழிஎன வவர் வளருப் அரும்பத மானதே.

நவநீதாமஞ்சரி முற்றிற்று.

---

சன்பிரான் சோப். இஃது மிகவும் உபயோகத்திற்கு திறம் வாய்ந்தது பரிச்சித்துப் பார்த்ததில் நன்றாய் இருக்கின்றது. எம். எஸ். சவரிமுத்துப் பிள்ளை அன்சன்ஸ் அர்ச். அந்தோனியா ஸ்டோர் நிர். 1 விக்டோரியா எக்ஸ்டென்ஷன் ரோடு, தூத்துக் குடியில் கிடைக்கும்.